உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பரமானந்தசித்தியார்

(:)

## சிவானுபூதிச்செல்வர்

அருளிச்செய்தது.

இஃது

திருநெல்வேலி,

திருநாவுக்கரசு ஸ்வாமிகள் மடாலயத்து

ராமலிங்கஸ்வாமிகளால்

சென்னை இராயப்பேட்டை

உமாபதி குருப்பிரகாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

கீலக வருஷம் ஆடிமீ

1908.

அமரர் கி. அ... அவர்களின் நினைவாக ... திருமதி சிவகாமி ... (1982)

SARASWATHI MAHAL LIBRARY, THE THANJAVUR

உ

சிவமயம்.

# முகவுரை.

---

திருவருட் டேறலைத் தெவிட்ட வருந்திப் பெருகிய வன்பிற் பிறங்கிய படியே அருளிறை யடிகள் தரிசன முதலாத் திருவடி பெற்ற சிறப்பள வுந்த முள்ளத் துதித்த ஒழுங்கே தலையாம் வள்ளற்கருணை வசமழித் தீர்ப்பப் பேசியபேரானந்த சித்தியார்ப் பெயரிய வொருநூல் ரகசியமாக விருந்து கிடைத்ததாகலானதை இச்சையுடையாரெவர்க்கு மெளிதிற் பயன்படுமா றுபகார மாக்குவலென வெழுந்தபேராசையே காரணமாக வெளியிடக்கருதித் துருவியதில் வேறுபிரதிகள் கிடையாமையானும், சிவானுபூதிச் செல்வரது வாக்கியங்களில் அத்தன்மையரே யன்றிக் கல்வித்திறமை மாத்திரையானே முயல்வார் பிரவேசித்தற் குரியரல்லராகலானும் கிடைத்த பிரதியில் காலப் பழமையாற் சில விடங்களில் ஜீர்ணப்பட்டுப் போதக்கழற்றி எட்டாவது செய்யுளும் அருட்கழற்றி ஏழாவது செய்யுளும் நிரம்பக்காணமையை இருந்தபடியே வைத்து அச்சிற் பதிப்பிக்கலாயினேன்.

**இராமலிங்கம்,**

திருநாவுக்கரசு ஸ்வாமிகள் மடம்,

திருநெல்வேலி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பேரானந்தசித்தியார்

—(:)—

சாப்பு.

சித்தி விநாயகனார் செந்தா மரைமலர்த்தாள்
பத்தியினாற் போற்றிப் பணிகுவா—முத்தராம்
வித்தியா னந்தர் விளம்பிய பேரானந்த
சித்தியார் சித்திக் கவே.

---

முதலாவது

## திருப்புன் முறுவல்.

---

இரிந்தோமிவன்பின் பணியாளாய்த்
திரும்பிச்சிறிதும் பாராதே
யிருந்தானெய்வில் பலவூழி
யெண்ணினிரைய சுவர்க்கங்கள்
பரிந்தான்யோனிப் படுகடல்கள்
பறியவிந்நா ளமைப்பார்க்க
விருந்தானேகோ வெனுங்குணியோ
வெம்மான்றிருப்புன் முறுவலே. [க]

நான்றன்னுடனு யிருக்கையினு
நாடானுனன் றிலையென்த்தன்
னூன்றனுட்னு யடங்கலுந்தா
னெனவுமுழன்ருன் சார்போத
னேன்றிங்கிவனே டெதிராடி
யிடித்திட்டிடித்திட் டெடுத்துணர்த்தத்
தான்றங்கினன்கா ணெனுங்குணியோ
தக்கோன் றிருப்புன்முறுவலே. [உ]

எள்ளத்தனையு மிரக்கமிலா
னிவனேகொடிய மாபாவி
யுள்ளத்துயர மொருகாலு
மொழியானிவனுந் தனையாளாய்க்
கொள்ளச்சொலியுந் திரிகின்ருன்
கொடியோனென மின்முகநோக்கி
விள்ளப்பெரிதா யிடுங்குணியோ
விண்ணேன் றிருப்புன் முறுவலே. [௩]

ஆருனந்தோ தீவினைக
ளந்தக்கரணஞ் சுத்தியிலான்
றேருன்றேற வுரைத்தாலுஞ்
செய்மாறென்கொ றிருநாமங்
கூருன்கூறு மவரிடத்துங்
குறுகானிவனு நமைக்காண
வாருனேகோ வெனுங்குணியோ
வானேன்றிருப்புன் முறுவலே. [௪]

அந்தோ விவன்றான் படும்பாட்டுக்
களவோவில்லை யவைக்கீடாய்
நொந்தான் கொடிய பிறப்பிறப்பி
ளுேவா திரங்கி நேர்நோக்கந்
தந்தாங்கெமது திருவருடான்
சாரும்பரிசா லெமைக்காண
வந்தானோகோ வெனுங்குணியோ
வாளுேன்றிருப்புன் முறுவலே. [௫]

கடைப்பட்டே வன்பிறப்பிறப்பிற்
கலங்கிக்குயவன் றிகிரிபோன்
மிடைப்பட்டே யென்னுழல்கின்றாய்
வேண்டமெய்புண் டென்றாலுந்
திடப்பட்டறியா ளுதலினாற்
றிகழுமருட்பா லெடுத்தேற்ற
விடைப்பட்டனன்கா ணெனுங்குணியோ
வெம்மான்றிருப்புன் முறுவலே. [௬]

சாகாவிடமுமில்லை யிவன்றான்
சாராயோனி யில்லமாய்ந்தும்
வேகாவிடமு மில்லையிற்றை
வரையுமுழன்றான் வேசற்றாங்
கேகாவழியாய் நாம்வலியத்
தடுத்தாட்கொளலு மெம்முனிவன்
வாகாய்நின்றா னெனுங்குணியோ
வாளுேன்றிருப்புன் முறுவலே. [௭]

நினையாமுனங் கேவலமானு
　　னினையப்பெறினே மாயையுட
றனையேசார்ந்தான் சார்வினையாற்
　　சரித்தான்வான்மண் ணிாயமெலாந்
தனையாங்காட்டும் படிகண்டான்
　　றனையாம்பார்க்க மலம்போக
வெனேநோக்கினன்கா ணெனுங்குணியோ
　　வெம்மான்றிருப்புன் முறுவலே. [அ]

உனக்கிங்குயிர்நா மென்றாலு
　　மோராரேனெரன் றுரைத்தாலு
மெனக்கிங்குயிர்நீ ரெப்பரிசென்
　　றெதிரானெதிரப் பெறுங்காலே
தனக்குள்ளறிவா மெனைக்காட்டச்
　　சார்ந்துகொளலு முனையல்லா
லெனைக்கண்டிலன்கா ணெனுங்குணியோ
　　வெம்மான்றிருப்புன் முறுவலே. [கூ]

மட்டாமலங்கட் குட்புறம்பாய்
　　வதிந்துமலமே தாரகமா
யொட்டாநின்று ணமதருளங்
　　கூடாடியவங்கவை யெல்லாம்
விட்டானருளே தாரகமாய்
　　மேவிக்கொண்டா னினிமலங்கட்
கெட்டானிவனென் றிடுங்குணியோ
　　வெம்மான்றிருப்புன் முறுவலே. [ய]

அங்கங்கடுத்த வியாபியா
யகப்பட்டதுவா மிவனந்தோ
பொங்குமலங்க ளுடனுகைப்
போந்துகிடந்தான் பல்லூழி
தங்குமருளா லறிவாகிச்
சார்ந்துகலந்தின் றேகோகோ
வெங்கும்பரந்தா னெனுங்குணியோ
வெம்மான்றிருப்புன் முறுவலே. [௧௧]

திருப்புன்முறுவல் முற்றிற்று.

---

இரண்டாவது

## மௌனமுத்திரை.

---

செத்தேசெத்துப் பிறக்கும்பல
தெய்வத்திறங்க ணினையாதே
வைத்தேனத்த முன்னருட்பால்
வைத்தாங்கதனு லெப்பொருளு
மொத்தேயறிந்தங் கவைகடந்துன்
றனக்காளாயங் கென்றெல்லாம்
செத்தேயுன தா யிடலன்றே
சிவனேமௌன முத்திரையே. [௧]

அறிந்தொன்ரென்ருய்க் கழன்றுபோ
யறிவித்திடுமவ் வறிவுடனுய்ச்
செறிந்தங்கறிந்தவறிவதனுற்
றேயத்தேய்வித் திடுமெறிவாய்ப்
பிறிந்துவிடுமா றவணரிய
பேருய்ப்பெறுதி மேலீடாய்ச்
சிறந்தங்கதுவா யிடலன்ருே
சிவனேமௌன முத்திரையே. [உ]

ஓதுமுரையு முள்ளுணர்வுங்
கடந்தாங்குள்ள பொருளனைத்தும்
பேதமறவே தனித்தனியே
பிறங்குமேகம் பலநாடி
மீதுகிளர்ந்த நின்னேகத்
தெல்லாமிலதா மேலீட்டி
னேதுங்குறியாத் திறமன்ருே
வெந்தாய்மௌன முத்திரையே. [௩]

உடலுமுயிருந் தற்சிவமு
மொன்ருேடொன்று கலப்பாகி
யிடல்கண்டவற்றிற் பிரிவரிதா
யேகமதுவா யேகத்தே
யுடலுமுயிரு முள்ளடங்க
வோங்கிச்சிவமே மேலாடி
யிடல்கண்டிருந்த படியன்ருே
வீசாமௌன முத்திரையே. [௪]

வந்தவாறும் போமாறும்
வாவென்றழைத்துன் னருள்காட்டித்
தந்தவாற்றி னுடனேயாய்த்
தாக்கற்றெல்லா மலங்களும்போ
யுய்ந்தவாற்றி னின்னிறைவி
ணென்றாய்க்கலந்தே னுணர்வடங்கத்
தந்தவாறு மதுவன்றோ
தலைவாமௌன முத்திரையே. [௫]

ஒன்றிரென்று கலந்துகலந்
துள்ளும்புறம்புந் தானேயாய்
நின்றபரிசு கண்டவற்றி
னிறைந்திடறுத்த பொருட்பாலாய்ச்
சென்றுகலந்து மாறதறத்
தேங்கிப்பிறிதுங் காணாதே
நின்றங்கதுவா யிடலன்றோ
நிமலாமௌன முத்திரையே. [௬]

பரந்தாங்ககண்ட மதுவாய
பரப்பெல்லாம்போய் நின்பரப்பி
னிரந்தாங்குறுவெங் கதிர்முனிருண்
மதிபோனேராய் மறைந்திடலு
மிருந்தாங்கெல்லா நீயேயா
யெழுவாயீறங் கிலதாகித்
திரிந்தாலருமைத் திறமன்றோ
தேவேமௌன முத்திரையே. [எ]

கருமமவுன மலமவுனங்
கருதுமாயை யினைமவுனி
மருவுமணுவின் றன்மவுனம்
வயங்கிற்றிகழு மருண்மவுனம்
பெருகநழுவு மிவையெல்லாம்
பெயர்ந்துபெயரா தளவிலா
வரனேயுனதா யெனதறுவ
தன்றோமௌன முத்திரையே. [அ]

உள்ளும்புறனு மெனக்கோத்தென்
னூடுங்கீழு மேலுமாய்க்
கொள்ளும்முனது பெயரேகங்
கொண்டாற்கூற வசமாமோ
வெள்ளுமவற்றிற் றயிலமும்போ
லெங்குநிறைந்தங் கூடுருவி
விள்ளமுடியா ததுவன்றோ
விமலாமௌன முத்திரையே. [கூ]

என்போதமு முன்போதமுமே
யெதிர்த்துச்சமர்செய் திடவெகுண்டங்
கென்போதத்தை யுன்போத
மெடுத்தேவிழுங்க வென்போத
முன்போதத்தி னுள்ளாறி
யூடுகலந்தங் கதுதானு
யென்போதம் போயிடலன்றோ
விறைவாமௌன முத்திரையே. [ய]

எழுவாயீறு மில்லாமே
யிருந்தபொருளங் கதனுள்ளே
யெழுவாயீறும் பெறநினைந்த
வேதம்பலவுங் கடந்துபோ
யெழுவாயீறு மில்லாவப்
பொருளினிருந்த படிகலந்தங்
கெழுவாயீறங் கறலன்றோ
விறைவாமௌன முத்திரையே. [௰௧]

மௌனமுத்திரைமுற்றிற்று.

ஆகவிருத்தம்—உஉ.

---

மூன்றாவது

# பிடித்தமுத்திரை.

---

மோகமலமா யாதிவினை
முழுதுமுனக்கு நாமுணர்த்தல்
பாகமவைநீ யறிந்தவுடன்
பறிந்ததுனை விட்டவைபறிய
வாகுமுனக்கங் கருளருளிற்
கலந்தாங்கவிழ்ந்தா லெனதுபெய
ரேகமுனக்கா மெனுங்குறிப்போ
விறைவன்பிடித்த முத்திரையே. [க]

ஒன்றேயன்றோ நீநானு
முரைக்கிலிரண்டு மலவாகி
நின்றதிறமங் கதினீநா
னிற்கும்பரிச திலதாகி
யென்றுமிருந்த படியேயா
மிவையொன்றிரண்டு மலவென்றே
நின்றுபணித்த திருக்குறிப்போ
நிமலன்பிடித்த முத்திரையே. [உ]

ஏள்ளத்தனையு மெனைப்பிரியா
யானுமதுவா மெஞ்ஞான்று
முள்ளத்துயர்வன் மலச்செருக்கா
லோகோவறியா துழல்கின்றாய்
விள்ளற்கரிய பேரேகம்
விளங்கிவேறு முடனுமாய்க்
கொள்ளக்கருதா யெனுங்குறிப்போ
குழகன்பிடித்த முத்திரையே. [௩]

எனைநீபிறியின் முத்தியெய்த
வேதின்றெவனற் பயனுனக்கெ
னுனையான் பிறியிற் பூரணனன்
றுனதினுள்ளே யொளித்திருந்த
வெனைநீயறிய மாட்டாதே
யெல்லாநானென் றிருந்தமைபோ
னினைநீயென்று யெனுங்குறிப்போ
நிருத்தன்பிடித்த முத்திரையே. [௪]

காட்டவரிய மலமாயை
கருமமவைகாட் டிடக்கண்டாய்
நாட்டவரிய வெனதருளே
நான்காட்டிடவு நீகண்டா
யீட்டமுடைய வுன்றனையுங்
காட்டக்கண்டா யினிநீநா
ளூட்டவரிய திதுவென்றே
நாதன்பிடித்த முத்திரையே. [௫]

நின்றாயெனைநீ வேறென்றே
நிற்குநிலைக ளனைத்தினையு
மின்றாதரவோ டுணர்த்தவிழித்
தெனதினறி விஃபாலனாய்
நன்றாமறிவி னின்னிலைமை
நாடற்கரிதா யிருந்தமைபோ
லொன்றாயிருக்கு மெனுங்குறிப்போ
வுடையான்பிடித்த முத்திரையே. [௬]

மாகமெவைக்கு முட்புறம்பாய்
வதிகமாகத் தளவுங்கா
லாகமாக மவளிபுளே
யடங்கவளியாவதுமந்த
மாகமதிலே யடங்கிரண்டொன்
றில்லாதிருக்கும் வாறேபோ
லேகமதுவா மெனுங்குறிப்போ
விறைவன்பிடித்த முத்திரையே. [௭]

ஒன்றேயெனவே நீகேட்டா
லுனக்குக்கிடைப்ப திலையிரண்டா
மென்றேயெண்ணிற் கதிகூடா
திவைதானற்றவனுபூதி
நின்றேபாரந் நிலையதனு
ணீநானு னீயெனுமயக்க
மின்றாயிருக்கு மெனுங்குறிப்போ
விறைவன்பிடித்த முத்திரையே. [அ]

எனதுநிறைவி னீமுதலற்
றெல்லாநிறைந்து சமனாக
வுனதுமெனதுங் கலந்ததிலை
யொன்றும்பலவு மலநாடி
லெனதுமுனது நானீயுங்
காணாதேக மதுவாமாங்
குனதேதெனதே தெனுங்குறிப்போ
வுடையான்பிடித்த முத்திரையே [கூ]

உனதினேக மலமேக
மோவாமாயை யிணையேகம்
வினையினேக மருளேக
மேன்மேற்சென்று சென்றாறித்
தனதினேகம் போலெல்லாந்
தருக்கிக்கழிந்த மேலீட்டி
லெனதினேக முத்தியென்றே
வெம்மான்பிடித்த முத்திரையே. [௰]

எண்ணவரிய பல்லுயிர்கட்
குயிராயெனது பேரருடா
னண்ணுநிலையு மளவில்பே
ரின்பமுனக்கா மந்நிலையும்
வண்ணவறிவு கழன்றென்னுய்
மன்னுநிலையு மொன்றிரண்டென்
றெண்ணவரி திப்படியென்றே
யிறைவன்பிடித்த முத்திரையே. (௰௧

உன்னதுனதின் செயலெல்லா
மொருங்கேவிடுவிங் கூடாடா
தென்னதெனது செயல்யானென்
றிருப்பதிலைநீ யினிக்கேட்பி
னுன்னதுனது செயனீயு
மொழிந்ததிறங்கண் டொழிவில்லா
தென்னதெனதா யிருவென்றே
யிறைவன்பிடித்த முத்திரையே. (௧௨)

**பிடித்தமுத்திரை முற்றிற்று.**

ஆகவிருத்தம்—௬௪.

நான்காவது

# கன்மக்கழற்றி.

---

தற்கமிறந்து சதுரிறந்து
 சார்வுமிறந்து மலச்செருக்காய்
நிற்கையிறந்து பிறப்பிறந்து
 நெடுநோணினைக்கு நினைப்பதும்போய்க்
கிற்கையிறந்து திருவருளைக்
 கெழுமலிறந்து பரம்பொருளைக்
கற்கையிறந்து கலந்தவெனைக்
 கருதப்படுமோ காமியமே. (க)

வாட்டமிறந்த திருவருளைக்
 கண்ணிற்கலந்து புறங்காணு
வாட்டிப்பயின்றங் கதனுவென்
 னகந்தையனைத்தும் படநூறி
நாட்டமொருமூன் றுடையநறுந்
 தேனைப்பருகி நானும்போய்க்
காட்டுங்குறியுங் கடந்தவெனைக்
 காணவெளிதோ காமியமே. (உ)

வெள்ளம்பரந்த சடைக்கடவுள்
விதியாவண்ணம் விதித்தனைத்தி
னுள்ளும்புறம்புந் தானேயா
யோவாதியற்று முணர்வேயுற்
றெள்ளுந்தரமற் றெழுவாயீ
றில்லாப்பொருளா யெல்லாம்போய்க்
கள்ளங்கடந்த திங்கென்றோ
கைவிட்டொழிந்தாய் காமியமே. (௬)

மருவியொளிர்சஞ் சிதத்திற்றங்
கிவரும்பிராரத் துவமத்திற்
பெருகிவரு மாகாமியமாய்ப்
பிறங்கிமூன்று வகுப்பேயாய்ப்
பொருதிங்கெனையிந் நாள்வரையும்
புரிந்தாய்புரிபுன் சடைக்கடவுள்
கருணைக்கடல்வந் தெனைக்கோக்கக்
காணாதுனையென் காமியமே. (௭)

பண்டைநிலையி னெனைப்புரந்தாய்
பரனாருளே கண்ணாகக்
கொண்டநிலையிற் குறிகளெல்லாங்
கூடக்கழல நான்வேறா
யண்டர்பெருமா னாட்கொளலு
மணித்தாயிலையுன் னுறவெல்லாங்
கண்டபொழுதோ வேதினட்போ
காணதொழிந்தாய் காமியமே. (௮)

ஆக்கைக்குயிரா யிருக்கும்போ
தணித்தங்கெனக்குப் பணியாளாய்ப்
போக்கும்வரவும் புணர்ப்புமாய்ப்
புணர்ந்தென் றனையும்பணிகொண்டாய்
நீக்கியிறைவ னுட்கொளலு
நின்றதிலையுன் னட்பெல்லாங்
காக்கையுறவோ போபோபோ
கண்டானகைப்பேன் காமியமே. (௬)

மூன்றாரவச் சடைக்கடவுள்
மொல்லாவெனைத்தன் மயமாக்கிப்
பேன்றுதனையுங் கலந்தருளிப்
பேரானந்தக் கடலாழுந்
தோன்றுதொன்று மென்றனக்குத்
தோற்றுமிடத்திற் போய்ப்பிழைநீ
கான்றுதொசிந்த துன்றனக்கே
நன்றுகாணுங் காமியமே. (௭)

செய்வதனைத்துஞ் சிவன்செயலாய்த்
தெளிந்துபிரித்தொன் றுணராதே
யுய்யுநிலையும் புலப்படா
வுணர்வுஞ்சிவத்தி னுட்கலந்தங்
கையமறுத்த திறமெல்லா
மாரோசொல்லக்கேட்டுநீ
கைவிட்டொழிந்தா யில்லையெனி
லெனையேன்விடுவாய் காமியமே. (௮)

மானார்கரத்தா னெனைக்கலந்தே
　　வரம்பத்தனையும் படநூறித்
தானாய்நிகழத் தனிநிலையிற்
　　றானுக்குந் தரமன்றே
யானலெனைநீ யெவ்வாறு
　　தணிப்பாயெனக்கு நீமுன்னங்
கானார்பேய்த்தேர் போற்றோன்றி
　　யிந்நாட்கழிந்தாய் காமியமே. (௧)

போனாய்கொல்லோ நட்பேயாய்ப்
　　புணர்ந்தென்றெனக்குப் புறங்காட்டி
மானார்கரத்தான் றனைக்கலவா
　　வண்ணமசைத்த மாபாவி
யானுன்னை யினிக்கண்டா
　　லருளாம்வைவா ளறவீசித்
தானே துணிப்பன் போய்ப்பிழைநீ
　　தருக்காதொழிநீ காமியமே. (௰)

நன்மை தீமை யிதமகித
　　நட்புவிடுதி தன துபுறம்
புன்மைமேன்மை யிவையேயாய்ப்
　　பூமிசுவர்க்க நிரயங்கள்
பன்மையோனி யனைத்தினுங்க
　　யிறும்பம்பரம்போ லெனையாட்டி
யின்மையானு யுறவமையு
　　மிறையாட்கொண்டான் காமியமே. (௰௪)

கன்மக்கழற்றி முற்றிற்று.

ஆகவிருத்தம்—௬௫.

ஐந்தாவது

## மாயைக்கழற்றி.

பிண்டங்கடந்தான் பதங்கடந்தான்
பெருமைகடந்தான் பெரிதேயா
மண்டங்கடந்தான் றத்துவங்க
ளனைத்துங்கடந்தா னளப்பரிய
குண்டங்கடந்தான் குணங்கடந்தான்
கூத்தன் றனக்காட் பட்டொளிருங்
கண்டங்கடந்தா னிவனென்றே
கைவிட்டொழிந்தாய் மாமாயாய். (க)

கரணங்கடந்தான் கலைகடந்தான்
காப்புங்கடந்தான் பூப்பிறந்தான்
மரணங்கடந்தா னளவிறந்தான்
மதிப்புங்கடந்தான் வளங்கடந்தா
னரணங்கடந்த சடைக்கடவுட்
காளாய்க்கலந்தங் கவனதிரு
சரணமடைந்தா னிவனன்றே
சாராதொழிந்தாய் மாமாயாய். (உ)

சுத்தவசுத்தப் பிரகிருதி
தோற்றங்கடந்தான் றோற்றத்தே
சத்தங்கடந்தான் புலவேடர்
சதிருங்கடந்தான் பொறிகடந்தா
னத்தன் றனக்கே யாளாகி
யகந்தைகடந்தா னிவனையினி
யெத்தமுடியா தெமக்கென்றே
வெனவிட்டொழிந்தாய் மாமாயாய். (ங)

வேதங்கடந்தான் வெளிகடந்தான்
வெறுப்புங்கடந்தான் விருப்பும்போய்
நாதங்கடந்தான் குடிலைமுத
னுடியிறங்கும் பாழ்கடந்தா
னேதங்கடந்தா னுகெட்டே
னிறைவன்றனக்கே யாளாய்த்தற்
போதங்கடந்தா னிவனென்றே
புலராதொழிந்தாய் மாமாயாய். (௪)

உள்ளுங்கடந்தான் புறங்கடந்தா
னுரிமைகடந்தா னருமையும்போய்க்
கொள்ளும்பொருள்க ளனைத்தையுமுட்
கொண்டேகடந்தான் குறைதீர்ந்தான்
றுள்ளுமதிச்செஞ் சடைக்கடவு
ளிணைத்தாட்கமலம் புனைநலம்வாய்
விள்ளுங்கடந்தா னிவனென்றே
விட்டிங்கொழிந்தாய் மாமாயாய். (௫)

உரையுங்கடந்தான் பொருள்கடந்தா
னுலவாவளவைக் களவாய
வரையுங்கடந்தா னருவவுரு
வைப்புங்கடந்தான் மலைவற்றான்
புரைபுன்சடில முடிக்கடவுட்
போந்தாட்கொளலுந் தனுகரணக்
கரையுங்கடந்தா னிவனென்றே
கைவிட்டொழிந்தாய் மாமாயாய். (௬)

தாரமதுவாய்ச் சுற்றமுமாய்
தாயாய்த்தந்தை தானேயாய்
வாரமதுவா யெனக்கினிய
மதியாயிருந்த திறனெல்லாம்
வீரமலிவெள் விடைக்கடவுள்
வெளிவந்தருள வெனக்குவெகு
தூரமதுவாய்ப் போனமையென்
சொல்லாய்நீதான் மாமாயாய். (எ)

என்னைக்கலந்தங் கெனக்கினிதா
யிந்நாள்வரையும் புணர்ந்திருந்த
வுன்னையிழந்து நானிருந்த
லுறவோவெனக்குன் மேற்பகையோ
பொன்னைப்பொலிந்த சடைக்கடவுள்
போந்தாட்கொளவுன் புணர்ப்பெல்லா
மின்னைப்பொருவ மறைந்திட்டாய்
வெகுண்டென்கொல்லோ மாமாயாய். (அ)

இறைவனருள் வந்தெனைக்கலக்க
வெனைவிட்டகன்று புறம்போனாய்
முறைமையலநம் புணர்ப்பெல்லா
முற்றுமறிந்து மொத்தேயுண்
ணிறைமன்செய்தி வேறானு
னிற்கைதருமா றலவென்றே
வுறைவதருண்முன் முடியாதோ
வொழிந்தாயெனைநீ மாமாயாய். (க)

மன்னும்பதமா யூனுயிராய்
வைப்பாய்மகிழ்ச்சி தானேயா
யென்னைப்புணர்ந்த திறமறந்த
தென்னீயுளையா யொன்றெனக்கே
தன்னைநிகர்க்கும் பரஞ்சோதி
தாட்டாமரைதந் தனனென்று
னுன்னைவசையான் செய்தேனே
வொழிந்தாய்நீயே மாமாயாய். (௰)

அண்ணலருள்வந் தெனைக்கலக்க
வந்தோவகன்ற மாமாயாய்
நண்ணுமுனதி னுறவெல்லா
நறுநீர்நாரை போலானு
லெண்ணுந்தரமே னேழ்மைநினைந்
தெனக்குனுறவு மினியமையுங்
கண்ணிற்சிறிதிங் குனைக்கண்டாற்
கனல்போன்முனிந்து கொல்வேனே. (௰௧)

மாயைக்கழற்றி முற்றிற்று.

ஆகவிருத்தம்—௫௬.

ஆறுவது.

## ஆணவக்கழற்றி.

---

என்னைவினையை மாயையினை
யிதனையிறையைத் திருவருளை
யுன்னையறிய வொட்டாதே
யுடனின்றெனையு மறப்பித்தாய்
பொன்னைப்பொலிந்த சடைக்கடவுள்
புகுந்தென்றனையும் பணிகொண்ட
பின்னைமறைப்பெவ் விடம்போன
பெற்றியுரையா யாணவமே. (௧)

இருளுமொளியென் றிடவிருண்டிங்
கிந்நாள்வரையு மெனைமறைத்தாய்
தெருளுமழவெள் விடைக்கடவுள்
சிந்தைபுகுந்து குடிகொளலு
மருளைப்பிறித்திட் டானந்த
வாரிபடிந்து மதிக்கரிய
வருளையடைந்தே னெனைநீ
யணுகுந்தரமோ வாணவமே. (௨)

பன்னாளெனையு மறமறைத்துன்
பாலேபரித்தி யெனைச்சயித்தா
யிந்நாளுனைவிட் டொழிந்தேனே
லெனக்குமுனக்கும் வழக்குண்டோ
சொன்னலறியாய் போகெடுவாய்
சொக்கப்பெருமா னெனையாண்ட
வந்நாட்டானே யுனைமறந்தே
னந்தோபோநீ யாணவமே. (௩)

உன்னையிழந்த வஞ்ஞான்றே
யுளனானெனக்குப் பதிபாச
மென்னையிழந்த வுன்றனக்கங்
கேதுண்டுரையாய் கொடும்பாவி
யுன்னைவினையை மாயையினை
யுணர்வைப்பதியை யுறக்கண்ட
வென்னைமறைக்க வினித்தகுமோ
விடிப்பேன்வரினீ யாணவமே. (௪)

காட்டுமிருடான் றன்னுருவ
மதுபோலுனையுங் காட்டாதே
மீட்டும்பதியோ டகத்தினையு
மெனையுமறைத்த மாபாவி
வாட்டமிலிதன் னருள்வரலு
மன்னிக்கலந்தங் கவையற்ற
நாட்டுங்கடந்த நானுனக்கிங்
கஞ்சுந்தரமோ வாணவமே. (௫)

ஆர்க்குந்தெரியப் போகாமே
யங்கோமறைத்தா யதுவேபோ
லேற்குந்தரமோ வென்னையினி
யெல்லாப்பொருட்கு நான்வேறாய்ப்
பார்க்கவரிய பரங்கருணைப்
பரமானந்தப் பழங்கடல்வா
யார்க்குமறிவிந்தனம் போன்றே
னார்க்குப்பயங்கா ணணவமே. (௬)

உந்தன்மறைப்ப தனைத்தினைப்
மொழித்தென் றனையும் வேருக்கி
யந்தமாதி நடுவிறந்த
வண்ணல்கலந்து கொடுபோனுன்
பந்தமுனக்கே னினியமையும்
பாங்காமுனது பான்மைக்கு
மந்தமானே னுனைக்கண்டா
னருட்பாற்கரப்பே ஞணவமே. (எ)

செம்பினுறுங் காளிதம்போலுந்
திரையுனுறு முப்பதுபோலு
மம்புநிழற்போற் றேன்ருதே
யளவிலூழி யெனைமறைத்தாய்
நம்பன்குளிகை கனமேபோ
னண்ணிக்கலந்து பிறித்திடலு
மம்பொன்ன றுநீர் போலாமென்
றனையானறிந்தே ஞணவமே. (அ)

உனக்குமெனக்கு மின்றுவந்த
தன்றேநட்ப தனுதியிலே
யுனக்குமெனக்கு முடங்தைதா
னெருநாளெனினு மெனைப்பிரியாய்
தனக்குநிகர்செஞ் சடைக்கடவு
டாட்டாமரையென் றலைசூட்ட
வெனக்குப்பகைநீ யுனக்குநான்
பகையாயிருந்தே ஞணவமே. (௯)

அறவுமெனவிட் டொழிந்ததுநீ
யருளைத்தரவோ தந்தாய்போ
லுறவங்தெனையு மருள்கொடுத்த
தொழியாயெனினீ வாராதே
யுறவுண்டொழிந்து மெனக்குநன்மை
யுறுதலாலே யுனக்கென்மேன்
மறமுண்டெனினு மென்செய்வைபோ
வாராதொழியா யாணவமே. (ய)

ஆணவக்கழற்றி முற்றிற்று.

ஆகவிருத்தம்—௬௬.

---

ஏழாவது

## போதக்கழற்றி.

---

இருளைப்பிரியா துடனிருந்தெப்
பொருளுநானே யெனத்தேற்ற
மருளைப்பொருளாய்க் குறித்தகுறி
வழுவாதிருந்த வுன்னுடைய
தெருளையிகழச் சினவிடையான்
சிறந்தாட்கொண்டே தனதுதிரு
வருளைத்தரநீ போனவழி
யறியுந்தரமோ போதமே. (க)

நீயன்றாய நிலையல்லா
 னீயேயென்ன நிலைநாணித்
தாயன்றாய மகவேபோற்
 றயங்கிப்பிரமஞ் சாதித்தாய்
வேயொன்றாய தோளமைபால்
 விகிர்தன்மழவெள் விடைக்கடவு
ளுயன்றனதின ருணனுக
 நாம்போனமையோ போதமே. (உ)

என்காலென்கை யெனதுமனே
 யான்செய்தே னென்செயலெல்லா
மென்பாலடங்க வுலகமெல்லாம்
 யானேபடைத்தே னெனத்தேற்றி
யின்பாம்பொருளு நான்றானென்
 றிருந்ததிறைவந் துட்புகுத
வென்பாற்காணேன் போனதெவ
 ணியம்பாயெனது போதமே. (௩)

உடையதெவைக்கு நானென்று
 முடலமடங்க நானென்று
மடையவிழுங்கிக் கொண்டகண்ட
 மானேனென்றுமாய் நின்றாய்
சடையதுடைய தனிக்கடவு
 டண்ணார்கருணைக் கதிர்காட்ட
வுடையபான்மை யுனக்கெவிடம்
 போனதுரையாய் போதமே. (௪)

என்போதம்மே நீயிங்கோ
யிந்நாள்வரையு மினிதிருந்தா
யுன்பாலுறவே தெனக்கமையு
முனக்குமெனக்கு மினிமாறும்
வன்பாடரவ மணிமுடியான்
வந்தாற்கெடுவா யுனைச்சிறிது
மென்பாலணுக வொட்டுவனோ
வெரிபுன்சடையெம் பெருமானே. (ரு)

உடையதன்மை யெனக்கமையு
முனக்குமெனக்கும் பிறிவினுக்கு
முடையதன்மை பரனருளென்
றுணரமாட்டா தொழிந்தாயே
கடையதான வுன்போதக்
கரையைக்கடந்து கவினீடும்
விடையதுடையான் பேர்போத
மேவத்தெளிவந் துய்ந்தேனே (சா)

மன்னும்பதங்கள் புவிபுனல்தீ
வளிவான்முதல பிறவனைத்து
மென்னையலது பிறிதுமற்றொன்
றில்லையென்றின் றியங்கினு
யுன்னையறியப் பேய்த்தேரா
யொளித்தாயுடையா னுட்புகுத
வென்னையவனென் கைவிடா
தேதுன்செயல்காண் போதமே. (எ)

அறியுமறிவு நானென்று
மகண்டமதுவுஞ் சாதித்தாய்
முறிவெண்மதிச்செஞ் சடைக்கடவுண்
முன்னேன்வெளி வந்திடவுனதி
னறிவுபோன போக்கேதிங்
கறையவலேயோ போதமே. (அ)

போதக்கடலேயின் றளவும்
பொருளேப்புணர வொட்டாதே
யேதப்படுத்தி யுறவேபோ
லெனக்குப்பகையா யெனேச்சயித்தாய்
சோதித்தனிவெள் விடைக்கடவு
டுணேத்தாட்கமலத் தூளி யென்மேன்
மோதப்போதக் கடலேநீ
முற்றுமுடிந்து தூர்ந்தாயே. (க)

போதக்கடல்போய் முடிந்திடலும்
புளகமெழுந்து திருவருளா
மோதக்கடலிற் பாறலேப்பெய்
துறநின்ருடி மாற்றலுமவ்
வாதக்கடலோ டகம்பிரம
மாண்டுமெழவெள் விடைக்கடவுள்
பாதக்கமலப் புணேயடைந்தார்
பாதமணுகப் பெற்றேனே. (ω)

**போதக்கழற்றி முற்றிற்று.**

**ஆகவிருத்தம்—எசு.**

எட்டாவது

# அருட்கழற்றி.

---

இதுகாண்கன்ம மிதுமாயை
யிதுவாணவமிங் கிதுகாணீ
யிதுகாணுனிங்கிது பதியென்
றெல்லாப்பொருளு மறிவித்தா
யதனுலெல்லாப் பொருளினையு
மறிந்தேயரன்ருள் சார்ந்திடலுந்
திதமாய்முன்போற் காட்டாதே
யெங்கேபோனய்திருவருளே. (க)

எல்லாப்பொருளும் பகுத்தறிவித்
தென்போதத்தி னூற்றறுத்திட்
டெல்லாப்பொருட்கு முன்செயலே
யீடாயாட்டித் தலைநின்ருய்
பொல்லாமணியாம் பரமேட்டி
போந்தங்கெழுவா யீறறநின்
றெல்லாந்தாஞ யிருந்திடலு
மெங்கேபோனய் திருவருளே. (உ)

வசமாய்க்கொண்டு நடத்துவதும்
வகுத்துக்காட்டி யுணர்த்துவது
மிசையாதுயிர்கட் கிரங்குவது
மிருந்தாதிக்கஞ் செலுத்துவது
மசையாதுயிர்கட் குயிராய்மற்
றளவிலின்பா யிருப்பதுவு
மிசையாதொழிந்தா யெனையீசன்
கலக்கவென்னே திருவருளே. (கூ)

மலமூன் றுனக்குப் பகையென்றும்
வருநானுனக்கு வுறவென்றுஞ்
சலமார்விடையான் பதியென்றுந்
தானேயுணர்த்தி யெனையாண்டா
யலவோநீயுன் றனக்குமிகை
யான்செய்தனனோ வெனையீசன்
கலவாதிருந்தா லெனைப்பிரியக்
கருதாய்கொல்லோ திருவருளே. (சு)

காட்டற்றுடைய பொருள்களெல்லா
நீகாட்டிடலு நானேகண்
டோட்டற்றெனது போதமும்போ
யுணர்வாலோட்டிப் பதிமூட்டி
யாட்டற்றெல்லா மலங்களும்போ
யரன்றாளடைந்து நான்சிவமாய்த்
தேட்டற்றிடலு நீமறைந்த
திறமென்னுரையாய் திருவருளே. (௭)

நல்லாயுனைப்போ லாரெனக்கின்
னட்புமுனது நட்பேநன்
றெல்லாநட்பு மாகெட்டே
னெனக்குப்பகையா மதனையொரு
சொல்லாற்கழித்திட் டெனைத்தூக்கிச்
சொக்கப்பெருமா னுடன்கலப்பித்
தெல்லாஞ்சிவமா யிருந்திடலு
மெங்கேபோனாய் திருவருளே. (௬)

அறியா வசித்தே மலங்களென்று
மறியவெனக்கிங் களிவித்தே

யாட்கொண்டானை யெனக்களித்த
யறிவேயுனையா னெவ்விடத்துக்
காண்பேனந்தோ திருவருளே. (௭)

உன்னைப்பிரிந்திங் குணர்விறந்திட்
டிருந்தேனென்றுங் காணேனு
னென்னைப்பிரித்திட் டெப்பொருளும்
பகுத்துக்காட்டி யெனக்குரிய
மனனையெனக்கீய்ந் தெனையவனுக்
கீய்ந்துமதித்தென் வாழ்வித்த
வுன்னைப்பிரிந்திங் காற்றுவனோ
வொழியத்தகுமோ திருவருளே. (௮)

சற்றுமொழியா வானந்தந்
    தானேதரவே நீபோனு
யுற்றிங்குடனுங் காலத்தி
    னொழியாப்பரமானந்தமோ
டற்றமுறுமின் பானந்த
    மளித்தாயந்தோ வவைகழியப்
பெற்றகாலை சிவானந்தந்
    தரப்பெற்றொழிந்தாய் திருவருளே. (௬)

இன்பக்கடலே யாரமுதே
    யெனக்குப்பகையா யெனையடர்ந்த
துன்பக்கடல்க ளனைத்தினையுந்
    தூர்த்தாட்கொண்ட தூநெறியே
யன்புக்கரசே யானந்த
    மனைத்துங்கடத்திச் சிவானந்தந்
தன்புக்கடைந்து கலந்திடநீ
    தந்தாயந்தோ திருவருளே. (௭)

அருட்கழற்றி முற்றிற்று.

ஆகவிருத்தம் ௮௬.

ஒன்பதாவது

# பொருட்கழற்றி.

---

தாக்கதறநின் னுடன்கலப்பத்
　　தானுநானுங் காணுதே
நீக்கமறுத்த சுகாதீத
　　நிலையாயெல்லா மொழிந்திடலும்
போக்குவரவற் றிருந்தபடி
　　புணர்ந்ததல்லா லெம்பெருமான்
ருக்கச்செலுத்து நினதுசெய
　　றவிர்ந்தவாறென் சாற்ருயே. (௧)

தன்னந்தனியாய் நீயிருந்த
　　தகைமையறிவா லறிவரிய
பின்னமிலையங் கிருந்தபடி
　　பிறங்கிற்றெல்லாம் பெருமானே
யுன்னையலது மிலைநீயு
　　மவையன்றிலையே லுனதுசெய
லென்னவெனக்கு நாவெழுமோ
　　வெழிலுன்றனையு மிழந்தேனே. (௨)

எல்லாநினது செயலென்னி
னெல்லாம்வேண்டா மவையுண்டே
லெல்லாமுனது செயலாகா
தெல்லாப்பொருட்கு முனதுசெய
லெல்லாநடத்த லாமென்னி
னெல்லாமுன்னை நடத்துவதா
மெல்லாமிருந்த படிதோன்று
மிடத்துன்செயலெங் கொளித்ததுவே. (க)

பாசச்செயலோ வறியாமை
பசுவின்செயலோ வறிந்தனைநீ
தேசிற்பெருகு திருவருளின்
செயலோதெருள நடத்துவதா
மாசிற்கலவா நினதுசெயன்
மற்றிங்கிவைமூன் றலதுண்டேற்
பேசப்பெரியா யிவையேநீ
யலதேற்பிறங்கக் காணுவே. (உ)

எழுவாயீற தறநிமிர்ந்த
வின்பாதீத நானேயாய்
வழுவாவரன்றன் னுடன்கலந்து
மாறற்றதுவாய் நின்றிடலு
முழுமாமணிச்செஞ் சோதிநீ
முன்னும்பின்னு மெனமுன்னம்
வழுவாதாட்டு நினதுசெயன்
மன்னேகாண மாட்டேனே. (ஙு)

உன்றன்பரப்ப தளவிறந்த
தளவுநான்றேய்ந் துடன்கலந்தே
னென்றன்பரப்ப தடங்கவுள்ளும்
புறம்பாயென்னை விழுங்கினாய்
பின்றென்பரப்பு மேற்பான்மை
பிறங்கிப்பேச்சோ டுரைமாள
வுன்றன்பரப்போ டெப்பரப்பும்
போனவாறென் னுடையானே. (சு)

பாசத்துறவும் பதிக்கலப்பு
மின்றாய்ப்பரந்த நிழலடைந்து
பேசப்பெரிது முடையடியார்
பேணும்பெருமை யுடையானே
மாசிற்பரைதன் மணவாளா
மன்னேயிருந்த படிதேர
வாசிற்பெருகு மும்மலமும்
யானுநீயு மற்றேனே. (எ)

அற்றேனீநா னுடன்கலந்த
வன்றேயொன்றுங் குறியாதே
பெற்றேன்பெறும்பே றிருந்தபடி
பேச்சுமுரையுங் குடிபோய
கிற்றேனினிநீ செலுத்துதற்குங்
கிளர்புன்சடையாய் மலர்நாற்ற
முற்றேனிவையாம் பரிசாலோ
வுறவும்பகையு மொழிந்தனையே. (அ)

என்றுமிருந்த படியிறைநீ
யிருக்குமதனை வுணராதே
யின்றைவரையு நான்புறம்பா
யேதுற்றவலக் கடலாழ்ந்தே
னின்றைவரைநீ வெளிப்படலு
மியானுமிருந்த படியிருந்தே
னென்றுமிருந்த பரிசிதுவென்
றெந்தாய்மனமுந் தெளிந்தேனே. (௯)

மன்னுங்கருமந் தொழிலென்று
மாயையுருவோ டருவென்றுந்
தொன்மையிருளே மலமென்றுந்
தொகுத்திங்கறித ஞனென்று
மென்னைநடத்த லருளென்று
மெவைக்குமுயிர திறையென்றும்
பின்னமறக்காண் கலப்பரெல்லாம்
பெரியாய்பேசா தொழிந்தனையே. (௰)

ஒன்றுநீயன் றன்றியுமின்
றென்னுமுடந்தை யுடன்பட்டங்
கென்றுமிருந்த படியேயா
யிருக்குமெழில்கண் டெம்மான்பா
னின்றநம்மோ டுடன்கலந்து
நிரம்பித்தேங்கி யுணர்வும்போ
யொன்றுமறியா னிவனென்றோ
வுடையாய்பேசா தொழிந்தனையே. (௰௧)

## பொருட்கழற்றி முற்றிற்று.

ஆகவிருத்தம்—௯௭.

பத்தாவது

# முத்திநிலைவினாமொழி.

---

மத்தாமாயை மலங்கருமம்
வதிதலுனக்கா முடந்தையைப்போ
லொத்தாமெனதி னருளுடந்தை
யுனக்கெய்துவதா லெனையோர்ந்து
கொத்தாமலங்க ளறவுனது
போதங்குலைந்தால் வான்கால்போ
லொத்தாங்கிருநீ யென்றதன்றோ
யுடையாய்முத்தி நிலைதானே. (௧)

மலநீயல்ல மாயையுநீ
யல்லவாகா மியமலமு
மலநீயவற்றை யாராயு
மறிவாதலினா லெனதருளான்
மலமூன்றினையும் பகுத்தறிந்து
வந்தாங்கெனைக்கூ டிடும்பரிசா
விலைநீநானா னென்றதன்றோ
விறைவாமுத்தி நிலைதானே. (௨)

நிறைவினிறைவாய்க் கலந்தவிழ்ந்து
நிற்குமெழிருன் வான்காலென்
றறைவதாக வத்துவித
மதுவாமதனே ரமையாயிற்
குறைவதறத்தா ஞனெனுமக்
குறிகள்கூடா திருந்தபடி
பெறுவதெனச்சொற் றதுமன்றே
பெரியாய்முத்தி நிலைதானே.

ஓர்வாய்மாயை மலங்கரும
முனக்கிங்குடலா மதையோரி
லார்வாயோர்வித் திடுமெருளை
யார்ந்தாலதுபோ லறநினைந்து
சேர்வாய்சேரி லெனைக்கலக்கச்
செய்வாய்கலந்துன் போதமறி
லார்வாயெனைப்போ லென்றதன்றே
வழகாமுத்தி நிலைதானே.

இருந்தபடியே யிருந்தவிடத்
தேதுங்குறியா வதுதாஞய்த்
திருந்திச்செம்மாந் திருந்தெல்லாஞ்
சிவமாய்க்காணுந் திருக்குறிப்பும்
பிரிந்துபுறம்போக் கறியாத
பேருய்ப்பேத நிலைமாய
விருந்துவிடுநீ யென்றதன்றே
விறைவாமுத்தி நிலைதானே. (௬)

விண்ணூர்கதிருந் தண்மதியும்
விளங்கப்பெறுந்தா ரகைக்குழுவு
மெண்ணவருமிக் கூரிருளு
மேகநிலையிற் காணதே
நண்ணநின்ற திறத்தெல்லா
நாசமாகா துற்பவியா
தண்ணநின்ற தென்றதன்றே
வமலாமுத்தி நிலைதானே. (௬)

தானே தானாய் நின்றவுண்மை
தன்னையடைந்து தான்போய்
வானேநிலனே மாறறியா
வண்ணம்போலாய் மயமாகி
யூனேயுயிர்வே றென்றுமற
வொன்றென்றிருந்த வுறுதியைப்போ
லானயெனநீ சொற்றதென்றே
வரசேமுத்தி நிலைதானே. (௭)

எள்ளினிறைந்த தயிலம்போ
லெதைநீயடுத்தா யவையெல்லா
முள்ளபரிசாய் நிறைந்தவைக்குட்
புறம்பாநீர்மை யெனதருளாற்
கொள்ளும்வகைக்குட் புறம்பாய்நான்
கொண்டபரிசா லென்னிடத்தி
னெள்ளிற்றயில மென்றதன்றே
விறைவாமுத்தி நிலைதானே. (௮)

# பேரானந்தசித்தியார்.

பொய்யாமுடலை மெய்யாகப்
போதுமனத்தைப் புறம்போக்கி
மெய்யாமருளை மெய்யாக
விரும்புஞானத் துடனேயாய்க்
கைம்மாறறவே நின்றுண்மை
கண்டுகலந்து பழச்சுவையொத்
தையாமோனம் பெறவென்ற
தன்றோமுத்தி நிலைதானே. (க)

கன்மமுதலா மலமூன்றுங்
கடந்துகருணை வடிவாகித்
தன்மைமுதலாம் புன்மைவிடத்
தாண்டிச்சாயா வணநிமிர்ந்து
நன்மையதுவாம் பரஞான
வெளியேநானீ கலந்துபிறி
தின்மைபெறவென் றதுமன்றோ
வெந்தாய்முத்தி நிலைதானே. (ய)

பாலோடிருக்குஞ் சுவையந்தப்
பாலைப்பிரியாப் பரிசெனவுங்
காலோடிருக்கும் வெளியந்தக்
காலைக்கடவாக் கடனெனவு
மேலோடிருக்குந் திருவருளு
நீயும்வேறன் றுடனுயென்
பாலோடிருக்கை யென்றதன்றோ
பரமாமுத்தி நிலைதானே. (யக)

**முத்திநிலைவினுமொழி முற்றிற்று.**

ஆகவிருத்தம்—௱அ.

———

திருப்புன்முறுவன் மவுனமலர்ச்
செங்கைபிடித்த முத்திரையாற்
கருப்புக்கழியா தெனைமுமலக்
கன்மமுதற்போ தமுங்கழற்றி
யருட்புக்குவித்திட் டவ்வருளு
மழிவில்பொருளுங் கழற்றிமுத்தி
யிருப்புற்றளித்தோ னூற்றெண்பா
விரைமாலிகைத்தாள் வாழியவே.

திருச்சிற்றம்பலம்.